முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 435/2015

தேதி : 04-09-2023

(பி.வா.சா.1) – மயிலாத்தாள்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : (3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

வாதிகள் எனது மக்கள். நான் சொல்லி தான் அவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள். அவர்களும் சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள். பின்னர் நானும் சொத்தில் பங்கு கேட்டு எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் சொத்துக்களை விற்பனை செய்ய என் சகோதரருக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தேன். அந்த பொது அதிகாரம் ஆவணம் எழுதிக்கொடுத்து அதில் கண்ட சொத்துக்களுக்கான தொகையை நானும், என் கணவரும் பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. சொத்துக்களுக்கான தொகையை என் சகோதரர் கொடுக்கவில்லை என்று அவருக்கு நான் வழக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. என் சகோதரர் எனக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், எல்லாத் தொகையையும் அவரே வைத்துக்கொண்டார் என்றும் கூறி காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக நடந்த கொடுக்கல் வாங்கல் விபரம் என் கணவருக்கு தெரியாது. என் கணவர் இறந்து 4 வருடங்கள் ஆகிவிட்டது. எல்லா சொத்துக்களுக்கான தொகையையும் என் சகோதரரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன் என்றும், அதனால் தான் நான் என் சகோதரரிடம் பணமும் கேட்கவில்லை என்றும், சொத்தில் பங்கும் வேண்டாம் என்று கூறிவிட்டேன் என்றும்

சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த பொது அதிகார பத்திரத்தை பயன்படுத்தி சொத்துக்களை பல நபர்களுக்கு என் சகோதரர் கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். ஆனால் என் சகோதரர் எனக்கு பணம் தரவில்லை. வாதிகள் லட்சுமாபுரத்தில் வசிக்கிறார்கள். நான் கோவை வடவள்ளியில் வசிக்கிறேன். வாதிகளுக்கு வழக்கு சொத்தில் எவ்வித பாகமும் இல்லை என்றும், நான் வாதிகளை தூண்டிவிட்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நானும் சொத்துக்களுக்கான தொகை பெற்றுக்கொண்டேன் என்றும், அதனால் எனக்கும் பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. என் சகோதரர் தாவா சொத்துக்களை பொறுத்து அவரது மக்களுக்கு எழுதி வைத்துள்ள ஆவணங்களை பற்றி நான் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. அதனால் நான் கோரும் பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3—ம் பிரதிவாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி தோராய பட்டாவில் உள்ள சொத்துக்களை பொறுத்து நானும், வாதிகளும் எந்தவித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.09.04 14:42:33 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.